# மாதிரி வினாத்தாள்-1
# வளரறித்தேர்வு

பாடம் : தமிழ் நேரம் : 80 நிமிடம்

வகுப்பு : ஆறாம் வகுப்பு மதிப்பெண்;40

***I*. கீழ்க்காணும் பத்தியைப் படித்து சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக. (5)**

இராமநாதபுரத்தை ஆண்ட மன்னர் செல்லமுத்து சேதுமதி – சக்கந்தி முத்தாத்தாள் இணையருக்குக் கி.பி.1730 ஆம் ஆண்டு ஒரே பெண் மகவாகத் தோன்றியவர் வேலு நாச்சியார்.இவர், பெற்றோரால் ஆண் வாரிசைப்போன்றே வளர்க்கப்பட்டு ஆயுதப் பயிற்சிமுதல் அனைத்தையும் கற்றுத் தேர்ந்தார். சிவகங்கை மன்னர் முத்து வடுகநாதர் வேலு நாச்சியாரை மணந்து கொண்டார். ஆங்கிலேயர் 1772 ஆம் ஆண்டு சிவகங்கைச் சீமையின் மீது படையெடுத்தனர்.

**வினாக்கள்:**

1.இராமநாதபுரத்தை ஆண்ட மன்னர் பெயர்
(அ) செல்லமுத்து சேதுபதி (ஆ) வீரமுத்து சேதுபதி (இ) வைரமுத்து

2.வேலு நாச்சியார் பிறந்த ஆண்டு
(அ) 1730 (ஆ) 1830 (இ) 1930

3. வேலு நாச்சியார் எப்பயிற்சி கற்றுத் தேர்ந்தார்
(அ) வில்பயிற்சி (ஆ) ஆயுதப்பயிற்சி (இ) இசைப்பயிற்சி

4. சிவகங்கைச் சீமையின்மீது படையெடுத்தவர்கள்.
(அ) ஆஸ்திரேலியர்கள் (ஆ) அரேபியர்கள் (இ) ஆங்கிலேயர்கள்

5.வேலு நாச்சியாரை மணந்து கொண்ட மன்னர்
(அ) சிவகங்கை மன்னர் (ஆ) கங்கை மன்னர் (இ) இலங்கை மன்னர்

***II*. கீழ்க்காணும் பத்தியைப் படித்து சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக. (5)**

தொண்ணூற்றாறு சிற்றிலக்கிய வகைகளுள் ஒன்று பிள்ளைத்தமிழ். இறைவனையோ நல்லாரையோ பாட்டுடைத் தலைவராகக்கொண்டு அவரைக் குழந்தையாகக் கருதிப் பாடப்பெறுவது பிள்ளைத்தமிழ் பத்துப் பருவங்கள் அமைத்துப் பருவத்திற்குப் பத்துப் பாடலென நூறு பாடலால் பாட்டுடைத் தலைவரின் செயற்கரிய செயல்களை எடுத்து இயம்புவது பிள்ளைத்தமிழ் இ்.து ஆண்பாற் பிள்ளைத்தமிழ் பெண்பாற் பிள்ளைத்தமிழ் என இருவகைப்படும். புள்ளிருக்கு வேளூரில் எழுந்தருளியிருக்கும் முருகப் பெருமானின் பெயர் முத்துக்குமாரசுவாமி.

**வினாக்கள்:**

1. 96 சிற்றிலக்கிய வகைகளுள் ஒன்று
(அ) பிள்ளைத்தமிழ் (ஆ) நற்றமிழ் (இ) இசைதமிழ்

2.பிள்ளைத்தமிழில் யாரை பாட்டுடைத் தலைவராகக் கொண்டு பாடப்படுவர்.
(அ) இறைவனையோ, நல்லாரையோ (ஆ) பெருமாளையோ, நல்லாரையோ
(இ) பிள்ளையோ , நல்லாரையோ

3. பத்துப் பருவங்கள் அமைத்து ஒரு பருவத்திற்கு எத்தனை பாடலால் பாட்டுடைத் தலைவரின் செயற்கரிய செயல்களை எடுத்து இயம்புவர்.
(அ) பத்து (ஆ) பதினைந்து (இ) ஒன்பது

4.பிள்ளைத்தமிழ் எத்தனை வகைப்படும்
(அ) நான்கு (ஆ) மூன்று (இ) இரண்டு

5.புள்ளிருக்கு வேளூரில எழுந்தருளிருக்கும் முருகப்பெருமானின் பெயர்
(அ)முத்துக்குமாரசுவாமி (ஆ) இராமகுமாரசுவாமி (இ) முத்துசாமி

www.kattrukkol.com

## பகுதி –ஆ ( எழுதுதல் ) (5)

***I*.கடிதம் எழுதுக (1மட்டும்)**

1. உமது பள்ளி நூலகத்திற்கு தமிழ் புத்தகங்களின் எண்ணிக்கை அதிகரிக்க வேண்டி தலைமை ஆசிரியருக்கு விண்ணப்பம் எழுதுக.
2. இடையில் நின்ற உமது நண்பனை மீண்டும் பள்ளிக்கு வருமாறு கடிதம் வரைக.

II.**கடிதம் எழுதுக (1மட்டும்)**

1.உமது ஊர் குறித்து கட்டுரை வரைக. **( அல்லது )** (5)
2.கல்வி என்னும் தலைப்பில் கட்டுரை வரைக.

## பகுதி - இ ( இலக்கணம் ) $10 x 1 = 10$

***I*.சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.**

1. எழுத்துகளின் ஒலியின் அளவை குறிக்கும் சொல்
   (அ) மாத்திரை (ஆ) அளவு (இ) எழுத்து
2. மாத்திரை என்பது
   (அ) பெரிய அளவு (ஆ) சிறிய அளவு (இ) மிக சிறிய அளவு
3. மெய்யெழுத்திற்குரிய மாத்திரையின் அளவு
   (அ) அரை (ஆ) ஒன்று (இ) இரண்டு
4. எண் எத்தனை வகைப்படும்
   (அ) மூன்று (ஆ) ஒன்று (இ) இரண்டு
5. 'பன்மை'யை – குறிக்கும் சொல்
   (அ) பூக்கள் (ஆ) பூ (இ) தாமரை
6. உயிர்மெய் நெடிலுக்கு உரிய மாத்திரையின் அளவு
   (அ) அரை (ஆ) இரண்டு (இ) ஒன்று

7.'இடம்' – எத்தனை வகைப்படும்
   (அ) மூன்று (ஆ) ஆறு (இ) நான்கு

8.'நான் , நாங்கள்' – எவ்வகை இடப்பெயர்
   (அ) பன்மை (ஆ) தன்மை (இ) படர்க்கை

9. தன்மை முன்னிலை அல்லாத மற்றவரைக் குறிப்பது
   (அ) படர்க்கை (ஆ) தன்மை (இ) முன்னிலை

10.'நீ , நீங்கள்' – என்பது எவ்வகை இடப்பெயர்
   (அ) முன்னிலை (ஆ) படர்க்கை (இ) தன்மை

## பகுதி -ஈ

***I*. எவையேனும் ஒன்றுக்கு விடையளி:** ( 5 )

*1.* முருகனைக் கவிராயர் எவ்வாறு போற்றுகிறார்?
*2.* இன்றைய தமிழனின் படைப்பாற்றல் எவ்வாறு உள்ளது?

***II*. எவையேனும் ஒன்றுக்கு விடையளி:** ( 5 )

1. பழக்கம் மாறி வருவதற்கு மலரின் தந்தை கூறிய எடுத்துக் காட்டுகள் யாவை?
2.செல்வர்கள் புலவர்களிடம் நடந்துகொள்ளும் முறை யாது?

www.Kalvikural.com

# மாதிரி வினாத்தாள்-2
# பருவத்தேர்வு

**வகுப்பு : ஆறாம் வகுப்பு** **மதிப்பெண் : 90**

**பாடம்;தமிழ்** **நேரம் : 3 மணி**

பகுதி – அ ( படித்தல்)

***I*. கீழ்க்காணும் பத்தியைப் படித்து வினாவிற்கு ஏற்ற விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக. (5)**

பத்துப்பாட்டும் எட்டுத்தொகையும் சங்கநூல்கள் எனப் போற்றப்படுவன. எட்டுத்தொகை நூல்களுள் முதலாவதாக வைத்து எண்ணப்படுவதும். நல் என்று அடைமொழி பெற்றுப் போற்றப்படுவதும் நற்றிணையே. நற்றிணை பல்வேறு காலங்களில் புலவர் பலரால் பாடப்பெற்ற பாடல்களைக் கொண்ட தொகுப்பு நூல். இதில் ஐவகைத் திணைகளுக்குமான பாடல்கள் உள்ளன. இதிலுள்ள பாடல்கள் ஒன்பது அடிச் சிற்றெல்லையும் பன்னிரண்டு அடிப் பேரெல்லையும் கொண்டவை. இப்பாடல்களைத் தொகுப்பித்தவர் பன்னாடு தந்தமாறன் வழுதி. நற்றிணைப் பாடல்கள் நானூறு பாடினோர் இருநூற்றெழுபத்தைவர்.

**வினாக்கள்:**

1. பத்துப்பாட்டும் எட்டுத்தொகையும் எவ்வகை நூல்கள் எனப் போற்றப்படுகின்றன.
   (அ) சங்கநூல்கள் (ஆ) சங்க இலக்கியங்கள் (இ) திருக்குறள்

2. 'நல்' – என்ற அடைமொழியால் அழைக்கப்படும் நூல்
   (அ) நறுந்தொகை (ஆ) நற்றிணை (இ) குறுந்தொகை

3. நற்றிணைக்குறிய சிற்றெல்லை________
   (அ) 9 (ஆ) 10 (இ) 8

4. நற்றிணைப் பாடல்கள் மொத்தம்
   (அ) 404 (ஆ) 400 (இ) 403

5. எட்டுத்தொகை நூல்களுள் முதலாவதாக வைத்து எண்ணப்படுவது.
   (அ) குறுந்தொகை (ஆ) கலித்தொகை (இ) நற்றிணை

***II*. கீழ்க்காணும் பத்தியைப் படித்து வினாவிற்கு ஏற்ற விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக. (5)**

கவிஞர் வெ.இராமலிங்கனார் நாமக்கல் மாவட்டத்திலுள்ள மோகனூரில் பிறந்தவர்.இவர்தம் பெற்றோர் வெங்கட்ராமன். அம்மணி அம்மாள் ஆவர். இவர், கவிதைப் போட்டிகள் பலவற்றில் பங்கேற்றுப் பரிசுகள் பெற்றார். தமிழக அரசின் முதல் அரசவைக் கவிஞராகத் திகழ்ந்தவர். இவருக்கு நடுவணரசு பத்மபூ'ண் விருது வழங்கிச் சிறப்பித்தது. இவர், தமிழக மக்களால் காந்தியக் கவிஞர் எனப் பெருமையுடன் வழங்கப்படுகிறார். இவரின் காலம் கி.பி.1888 முதல் 1972 வரையாகும்.

**வினாக்கள்:**

1. தமிழக அரசின் முதல் அரசவைக் கவிஞராகத் திகழ்ந்தவர் ________.
   (அ) வெ.இராமலிங்கனார் (ஆ) வெ.இராமலிங்கசுவாமி (இ) இராமசாமி

2. கவிஞர் வெ. இராமலிங்கனாருக்கு நடுவணரசு எவ்வகை விருது வழங்கிச் சிறப்பித்தது.
   (அ) பத்மபூ'ண் (ஆ) பத்மவிபூ'ண் (இ) பாரத ரத்னா

3. தமிழக மக்களால் இராமலிங்கனார் எவ்வாறு வழங்கப்படுகிறார்.
   (அ) காந்தியக்கவிஞர் (ஆ) மக்கள் கவிஞர் (இ) தமிழக கவிஞர்

4. எப்போட்டிகளில் பங்கேற்றுப் பரிசுகள் பல பெற்றார்.
   (அ) கவிதை (ஆ) கதை (இ) இசை

5. வெ.இராமலிங்கனாரின் காலம்
   (அ) கி.பி.1888 முதல் 1972 வரை (ஆ) கி.பி.1898 முதல் 1872 வரை (இ) கி.பி. 1988 முதல் 1982 வரை

www.Kalvikural.com

*III*. **கீழ்க்காணும் பத்தியைப் படித்து வினாவிற்கு ஏற்ற விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.** (5)

திருநாவுக்கரசர் திருவாமூரில் பிறந்தவர். பெற்றோர் புகழனார். மாதினியார், இவரது தமக்கையார் திலகவதியார். திருநாவுக்கரசருக்குப் பெற்றோர் இட்டபெயர் மருணீக்கியார். இவருக்குத் தருமசேனர் அப்பர், வாகீசர் என்னும் வேறு பெயர்களும் உண்டு. இவரது நெறி தொண்டு நெறி , சைவ அடியார்களை நாயன்மார்கள் என்றழைப்பர். இவர்கள் அறுபத்து மூவர். சைவ சமயக் குரவர் நால்வருள் ஒருவர் திருநாவுக்கரசர், இவர் தம் பாடல்கள் தேவாரம் எனப் போற்றப்படுகின்றது. இவர் தாண்டகம் பாடுவதில் வல்லவர் ஆதலால் இவர் தாண்டகவேந்தர் எனவும் அழைக்கப்படுகிறார்.

**வினாக்கள்:**

1.திருநாவுக்கரசருக்குப் பெற்றோர் இட்டபெயர்
(அ) மருணீக்கியார் (ஆ) மருளிக்கியார் (இ) மணீக்கியார்

2. திருநாவுக்கரசரின் வேறு பெயர்
(அ) அப்பர் (ஆ) சுந்தரர் (இ) பெருசேனர்

3. திருநாவுக்கரசர் பிறந்த ஊர்
(அ) திருமுனைப்பாடி (ஆ) திருவை குண்டம் (இ) திருவாமூர்

4. சைவ நாயன்மார்கள் மொத்தம்
(அ) 53 (ஆ) 63 (இ) 36

5. திருநாவுக்கரசர் எவ்வாறும் அழைக்கப்படுகிறார்.
(அ) தாண்டகவேந்தர் (ஆ) தாண்டகம் (இ) தாண்டகமூர்த்தி

## பகுதி – ஆ ( எழுதுதல் - 20 )

***I***. **கடிதம் எழுதுக. ( எவையேனும் ஒன்றுக்கு )** $1 x 10 = 10$

1. தேர்வில் முதன்மை பெற்ற நண்பனுக்குப் பாராட்டிக் கடிதம் எழுதுக.

2.காணாமற்போன மிதிவண்டியை மீட்டுத் தருமாறு காவல்துறைத் தலைவருக்குப் புகார்க் கடிதம் எழுதுக.

***II***. **கட்டுரை எழுதுக. ( எவையேனும் ஒன்று )** $1 x 10 = 10$

'சுற்றுப்புறச் சூழலும் மாசுக்கட்டுப்பாடும்'. என்னும் தலைப்பில் ஓர் கட்டுரை வரைக.
(முன்னுரை – சுற்றுப்புறச் சூழல் - காற்றுமாசுபாடு – தண்ணீர் மாசுபாடு – விண்வெளியில் மாசுபாடு – கட்டுப்படுத்தும் வழிகள் - முடிவுரை)

**(அல்லது)**

நாட்டு முன்னேற்றத்தில் மாணவர்களின் பங்கு என்னும் தலைப்பில் ஓர் கட்டுரை வரைக.

## பகுதி - இ ( இலக்கணம் - 15 )

***I***. **உரிய விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.** $15 x 1 = 15$

1. தமிழன் முதல் எழுத்து
(அ) அ (ஆ) ப (இ) ம
2. 'ங்' – என்னும் எழுத்திற்குரிய நட்பு எழுத்து
(அ) ம் (ஆ) க் (இ) ற்
3. 'ஓ , டோ , தா ' - இவை மூன்றும் எவ்வகை எழுத்துகள்
(அ) குறில் (ஆ) நெடில் (இ) சார்பெழுத்து
4. 'ச்' + ஏ' = ______ என்னும் எழுத்து தோன்றும்.
(அ) செ (ஆ) சே (இ) சோ
5. உயிரும் மெய்யும் சேர்ந்தால் _______ உயிர்மெய் எழுத்துகள் தோன்றும்.
(அ) 10 (ஆ) 216 (இ) 16
6. தமிழ் எழுத்துகள் மொத்தம்
(அ) 247 (ஆ) 200 (இ) 18
7. மதுனரைக்கு + செல்வோம் = இவற்றின் இடையில் வரும் ஒற்றெழுத்து.
(அ) ச் (ஆ) க் (இ) ப்
8. 'கிணரில் போட்டேன்' - இவற்றை திருத்தி எழுதுக.
(அ)கிணறில் போடு (ஆ) கிணற்றில் போட்டேன் (இ) போட்டேன் கிணறு
9. தமிழ் சொற்கள் ________ வகைப்படும்.
(அ) 5 (ஆ) 6 (இ) 4

www.Kalvikural.com

10. ‘ஆறு’ என்னும் சொல்லுக்கு __________ பொருள்கள் உண்டு.
(அ) 10 (ஆ) 14 (இ) 4
11. குழந்தை _______ என ஓடியது , இதற்கான இரட்டைக் கிளவியை எழுதுக.
(அ) குடுகுடு (ஆ) படபட (இ) வளவள
12. ‘குறில்’ எழுத்துகள் எவ்வகை இனத்தை சார்ந்தது.
(அ) ஒற்றைக்கொம்பு (ஆ) நெடில் (இ) இரட்டைக்கொம்பு
13. ‘சாப்படு தாயார்’ – குறில் நெடில் பிழைகளை நீக்கி எழுதுக.
(அ) சாப்படு தயார் (ஆ) சப்பாடு தயார் (இ) சாப்பாடு தயார்
14. துணையெழுத்துப் பிழைகளை நீக்கி எழுதுக.
(அ) மருத்துவமன பாகும் வழி (ஆ) மருத்துவமனை பாகும்வழி (இ) மருத்துவமனை போகும் வழி
15. மயங்கொலிப் பிழைகள் அற்ற தொடர்.
(அ) நால்தோறும் பகல் காட்சி உண்டு
(ஆ) நாள்தோறும் பகல் காட்சி உண்டு
(இ) நாதோறும் பகல் கட்சி உண்டு

## பகுதி - ஈ ( பாடநூல் - 40 )

*I*. **கீழ்க்காணும் பத்தியைப் படித்து சரியான விடையை எழுதுக.** **(5)**

இராமலிங்க அடிகளார். திருவருட்பிரகாச வள்ளலார் என்னும் சிறப்பு பெயர் பெற்றவர். இவர், கடலூர் மாவட்டம் மருதூரில் பிறந்தவர். பெற்றோர் இராமையா – சின்னம்மையார். ஜீவகாருண்ய ஒழுக்கம். மனுமுறை கண்டவாசகம் ஆகிய நூல்கள் இவர் எழுதியவை. இவர் பாடல்கள் அனைத்தும் ‘திருவருட்பா’ எனத் தொகுக்கப்பட்டுள்ளன. சமரச சன்மார்க்க நெறியை வழங்கியவர் இவரே.

**வினாக்கள் :**

1.’திருவருட்பிரகாச வள்ளலார்’ என்னும் சிறப்புப் பெயர் பெற்றவர்.
(அ) இராமலிங்க அடிகள் (ஆ) அடிகளார் (இ) சிவபிரகாசர்

2. ‘ இராமலிங்க அடிகளார் ‘ பிறந்த இடம்
(அ) மருதூர் (ஆ) திருவாரூர் (இ) திருநெல்வேலி

3. இவர் பாடல்கள் அனைத்தும் _______ எனத் தொகுக்கப்பட்டுள்ளன.
(அ) திருக்குறள் (ஆ) திருவருட்பா (இ) திருமந்திரம்

4. சமரச சன்மார்க்க நெறியை வழங்கியவர்.
(அ) இராமலிங்க அடிகள் (ஆ) அப்பூதி அடிகள் (இ) சமண முனிவர்

5. இராமலிங்க அடிகளார் எழுதிய நூல் __________________
(அ) மனுமுறை கண்டவாசகம் (ஆ) திருவாசகம் (இ) தேவாரம்

*II*. **கீழ்க்காணும் பத்தியைப் படித்து சரியான விடையை எழுதுக.** **(5)**

உ.வே.சா பிறந்த ஊர் திருவாரூர் மாவட்டத்தில் உள்ள உத்தமதானபுரம், இவருடைய இயற்பெயர் வேங்கடரத்தினம். அவருடைய ஆசிரியரின் பெயர் மகாவித்துவான் மீனாட்சிசுந்தரம். இவருடைய ஆசிரியர் அவருக்கு வைத்த பெயர் சாமிநாதன். அதனால் அவர் உத்தமதானபுரம் வேங்கடசுப்புவின் மகனார் சாமிநாதன் என்பதன் சுருக்கமாகவே உ.வே.சா. என்று அழைக்கப்பட்டார். 19.02.1855 ஆம் ஆண்டு பிறந்த அவர், 28.04.1942 ஆம் ஆண்டு இயற்கை எய்தினார்.

**வினாக்கள் :**

1. உ.வே.சா. பிறந்த ஊர்
(அ) உதகை (ஆ) உதானபுரம் (இ) உத்தமதானபுரம்

2. உ.வே.சா. வின் இயற்பெயர்
(அ) வேங்கடம் (ஆ) ரத்தினம் (இ) வேங்கடரத்தினம்

3. உ.வே.சா.வின் ஆசிரியர் பெயர்
(அ) மீனாட்சிசுந்தரம் (ஆ) சோமசுந்தரம் (இ) ராமசுந்தரம்

4. உ.வே.சா பிறந்த ஆண்டு
(அ) 1855 (ஆ) 1955 (இ) 1856

www.kattrukkol.com

5. உ.வே.சா மறைந்த ஆண்டு
   (அ) 1941 (ஆ) 1942 (இ) 1842

**$III$. கீழ்க்காணும் பாடலைப் படித்து வினாவிற்கு விடையளி: (4)**

வைதோரைக் கூட வையாதே - இந்த
வைய முழுதும் பொய்த்தாலும் பொய்யாதே!
வெய்ய வினைகள் செய்யாதே – கல்லை
வீணில் பறவைகள் மீதில் எய்யாதே!
பாம்பினைப் பற்றி ஆட்டாதே – உன்றன்
பத்தினி மார்களைப் பழித்துக் காட்டாதே!
வேம்பினை உலகில் ஊட்டாதே – உன்றன்
வீறாப்பு தன்னை விளங்க நாட்டாதே!

**- கடுவெளிச் சித்தர்**

**வினாக்கள் :**

1. 'வீறாப்பு' – என்னும் சொல்லின் பொருள்
   (அ) இறுமாப்பு (ஆ) அமைதி (இ) உடம்பு

2. இப்பாடலின் ஆசிரியர்_______
   (அ) பாம்பாட்டிச்சித்தர் (ஆ) கடுவெளிச் சித்தர் (இ) குதம்பைச் சித்தர்

3. வையம் முழுவதும் பொய்த்தாலும் நாம் ____________ கூடாது.
   (அ) உண்மை பேச கூடாது (ஆ) பொய் பேச கூடாது (இ) எதுவுமில்லை

4. எதை உலகில் ஊட்ட கூடாது.
   (அ) இனிமையை (ஆ) சுவையை (இ) வேம்பினை

**$IV$. எவையேனும் இரண்டிற்கு மட்டும் விடையளி : $2 x 4 = 8$**

1. நாலடியார் கூறும் நட்பு குறித்து எழுதுக.
2. கற்றவர்க்குக் கட்டுச்சோறு தேவைப்படாது, ஏன்?
3. சித்தர் பாடல் வாயிலாக கடுவெளிச் சித்தர் கூறும் பாடலின் பொருளை தொகுத்து எழுதுக.

**$V$. எவையேனும் இரண்டிற்கு மட்டும் விடையளி : $2 x 5 = 10$**

1. பெரியார் ஏன் 'வைக்கம் வீரர்' என வழங்கப்பட்டார்?
2. நாட்டுப்புறப் பாடல்களின் வகைகளை எழுதுக?
3. பறவைகளை எத்தனை வகைகளாய்ப் பிரிக்கலாம் அவை யாவை?
4. அக்கால ஓலைச்சுவடிகளைப் படிப்பதில் ஏற்படும் இடர்ப்பாடுகள் யாவை?

**$VI$. கட்டுரை எழுதுக. ( எவையேனும் ஒன்றுக்கு மட்டும் ) $1 x 8 = 8$**

1. தங்கமாம்பழமும் சூட்டுக்கோலும்
2. வீரச்சிறுவன்
3. பாம்புகள்

www.kalvikural.com

# மாதிரி வினாத்தாள்-3
# வளரறித்தேர்வு

**வகுப்பு;ஆறாம்** **மதிப்பெண் : 40**
**பாடம்;தமிழ்** **நேரம் : 80 நிமிடம்**

**பகுதி – அ ( படித்தல் )**

***I.*** **கீழ் உள்ள பத்தியைப் படித்து வினாக்களுக்கான சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக** $5 x 1 = 5$

பாரதி ஒரு தேசியக்கவி. பாரதியின் இயற்பெயர் சுப்பிரமணியன். இவர் எட்டையபுரத்தில் பிறந்தார். நாட்டு விடுதலைக்காகப் பாட்டுப்பாடி, மக்களிடம் நாட்டுப்பற்றை வளர்த்தார். பாப்பாப் பாட்டு, கண்ணன் பாட்டு, குயில் பாட்டு முதலிய பாடல்களை இயற்றியுள்ளார். இவர் 'பாட்டுக்கொரு புலவன்' என்று கொண்டாடப்பட்டார். முறுக்கிய மீசையும், கம்பீர நடையும் பாரதியாரின் தோற்றமாகும். பாரதியைப் பின்பற்றி பாரதிதாசன், கவிமணி ஆகியோர் இனிய தமிழ்ப் பாடல்களை எழுதினர்.

**வினாக்கள்**

1. பாரதியின் இயற்பெயர் யாது?
   (அ) சுப்புரத்தினம் (ஆ) சுப்பிரமணியன் (இ) சுப்பு

2. பாரதி எங்கு பிறந்தார்?
   (அ) அஸ்தினாபுரம் (ஆ) கோடடூர்புரம் (இ) எட்டையபுரம

3. பாரதி மக்களிடம் நாட்டுப்பற்றை எவ்வாறு வளர்த்தார்.
   (அ) பாட்டுப்பாடி (ஆ) நடனமாடி (இ) சொற்பொழிவாற்றி

4 .பாரதி எவ்வாற கொண்டாடப்பட்டார்.
   (அ) கவிமணி (ஆ) பாட்டுக்கொரு புலவன் (இ) புலவரேறு.

5. பாரதியைப் பின்பற்றியவர்களுள் ஒருவர்
   (அ) பாரதிதாசன் (ஆ) காமராசர் (இ) சுரதா

***II.*** **கீழ் உள்ள பத்தியைப் படித்து வினாக்களுக்கான சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக** $5 x 1 = 5$

முன்னொரு காலத்தில் சோழநாடு இரு பிரிவுகளாக இருந்தது. கருவூர்ப்பகுதியை நலங்கிள்ளியும், உறையூர்ப் பகுதியை நெடுங்கிள்ளியும் ஆட்சி செய்து வந்தனர். இவர்களுக்குள் தீராப்பகை. இதனால், அங்கே அடிக்கடி போர் மூளும் சூழல் ஏற்பட்டது. இருநாட்டு மக்களம் துயரத்திற்கு ஆளாயினர். ஒற்றர் , பகைவர் என்று குற்றம் சாட்டப்பட்டுப் பலர் சிறையில் அடைக்கப்பட்டனர்.புலவர் இளந்தத்னாரும் இக்குற்றச்சாட்டுக்கு ஆளாகி உறையூர்ச் சிறையில் அடைக்கப் பட்டார்.

**வினாக்கள்**

1.சோழநாடு எத்தனை பிரிவுகளாக இருந்தது.
   (அ) இரண்டு (ஆ) மூன்று (இ) நான்கு

2. கருவூர்ப்பகுதியை ஆட்சி செய்தவர் யார்?
   (அ) கிள்ளி (ஆ) நலங்கிள்ளி (இ) நெடுங்கிள்ளி

3. நெடுங்கிள்ளி ஆட்சி செய்த பகுதி எது?
   (அ) கோவூர் (ஆ) கருவூர் (இ)உறையூர்

4. இருநாட்டு மக்களும் எதற்கு ஆளாயினர்.
   (அ) இன்பத்திற்கு (ஆ) துன்பத்திற்கு (இ) செல்வத்திற்கு

5. உறையூர் சிறையில் அடைக்கப்பட்ட புலவர் யார்?
   (அ) இளந்தத்தனார் (ஆ) நலங்கிள்ளி (இ) நெடுங்கிள்ளி

www.kalvikural.com

## பகுதி – ஆ ( எழுதுதல்)

**I. கடிதம் எழுதுக. ( எவையேனும் ஒன்றுக்கு )**

1.உன் வகுப்பாசிரியரிடம் விடுமுறை வேண்டி விண்ணப்பம் எழுதுக. **(5)**

2.குடிநீர் வசதி வேண்டி நகராட்சி ஆணையர் அவர்களுக்கு கடிதம் ஒன்று வரைக

**II. கட்டுரை எழுதுக. ( எவையேனும் ஒன்று )**

.

1. உனக்குப் பிடித்த கவிஞர் பற்றி கட்டுரை எழுதுக. **(5)**
2. உனக்குப் பிடித்த பறவை பற்றி கட்டுரை எழுதுக.

## பகுதி - இ ( இலக்கணம்) $10 x 1 = 10$

1. தமிழில் உள்ள உயிரெழுத்துகளுள் குறில் எழுத்துகள் எத்தனை
   (அ) ஐந்து (ஆ) ஆறு (இ) ஏழு
2. தலைமேல் புள்ளியைக் கொண்ட எழுத்துகள் எவை.
   (அ) உயிரெழுத்துகள் (ஆ) மெய்யெழுத்துகள் (இ) ஆய்த எழுத்துகள்
3. தமிழில் உள்ள மொத்த எழுத்துகள் யாவை?
   (அ) 216 (ஆ) 217 (இ) 247
4. முதலெழுத்துகள் எத்தனை
   (அ) இருபது (ஆ) ஐம்பது (இ) முப்பது
5. உயிரெழுத்துகளுள் நெடில் எழுத்துகள் எத்தனை?
   (அ) ஆறு (ஆ) ஏழு (இ) எட்டு
6. மெய்ம்மயக்கம் எத்தனை வகைப்படும்
   (அ) இரண்டு (ஆ) மூன்று (இ) நான்கு
7. உயிரெழுத்துகள் எத்தனை
   (அ) 10 (ஆ) 12 (இ) 14
8. மெய்யெழுத்துகள் எத்தனை வகைப்படும்
   (அ) மூன்று (ஆ) நான்கு (இ) ஐந்து
9. தென்னை என்னும் சொல்லில் தெ என்பது
   (அ) குறில் (ஆ) நெடில் (இ) உயிர்
10. ச் என்னும் எழுத்தின் நட்பு எழுத்து
    (அ) ட் (ஆ) ஞ் (இ) ம்

**I. எவையேனும் ஒன்றுக்குமட்டும் விடையளி:** **5**

1. அன்புடையார் இயல்பு யாது?
2. ‘வலசை போதல்’ பற்றி விவரி.

**II. கட்டுரை எழுதுக.** **5**

1.பாம்புகள்

www.Kattrukkol.com

# மாதிரி வினாத்தாள்-4
# வளரறித்தேர்வு

**வகுப்பு :ஆறாம் வகுப்பு** **மதிப்பெண் : 20**
**பாடம் ;தமிழ் (தாள்-1)** **நேரம் : 45 நிமிடம்**

**பகுதி – அ ( படித்தல் திறன்)**

***I*. கீழ்கண்ட பத்தியைப் படித்து வினாவிற்கு ஏற்ற விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.**

புறநானூறு = புறம் + நான்கு + நூறு. புறப்பொருள் பற்றிய நானூறு பாடல்களைக் கொண்டதால் புறநானூறு எனப் பெயர் பெற்றது. புறம் என்பது ஒருவரின் வீரம், கொடை , கல்வி முதலிய சிறப்புகளைக் குறிக்கும். இஃது எட்டுத்தொகை நூல்களுள் ஒன்று இந்நூலிலுள்ள பாடல்கள் பல்வேறு புலவர்களால் பாடப்பெற்றவை. இப்பாடல்கள் வாயிலாகப் பண்டையத் தமிழ் மன்னர்களின் ஆட்சிச்சிறப்பு, வீரம் , கொடை, கல்வி முதலியவற்றை அறியலாம். இந்நூலிலுள்ள சில பாடல்களை ஜி.யு.போப் ஆங்கிலத்தில் மொழி பெயர்த்துள்ளார்.

**வினாக்கள்:** (5)

1. புறப்பொருள் பற்றிய நானூறு பாடல்களைக் கொண்ட நூல்
   (அ) அகநானூறு (ஆ) புறநானூறு (இ) பத்துப்பாட்டு

2. புறநானூறு எவ்வகை நூல்களுள் ஒன்று
   (அ) எட்டுத்தொகை (ஆ) பத்துப்பாட்டு (இ) பதிற்றுப்பத்து

3. புறநானூற்று பாடல்களைப் பாடியவர்கள்
   (அ) சில புலவர்கள் (ஆ) ஒரு புலவர் (இ) பல்வேறு புலவர்கள்

4. புறநானூற்று பாடலின் வாயிலாக________மன்னர்களின் ஆட்சிச்சிறப்பினை அறியலாம்.
   (அ) ஆங்கில மன்னர் (ஆ) தமிழ் மன்னர் (இ) ஐரோப்பிய மன்னர்

5. புறநானூற்று பாடல்களை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்தவர்.
   (அ) ஜி.யு.போப் (ஆ) யு.ஜி.போப் (இ) ஜி.வு.போப்

**பகுதி – ஆ (எழுதுதல்)** (5)

***II*. கடிதம் அல்லது கட்டுரை எழுதுக. (ஒன்று மட்டும் )**

1. சுற்றுலாச்செல்ல அனுமதி வேண்டித் தந்தைக்குக் கடிதம் எழுதுக.
2. நீ விடுமுறையை கழித்த விதத்தைப் பற்றி உன் தோழிக்குக் கடிதம் எழுதுக.

**பகுதி - இ ( (இலக்கணம்)**

***III*. உரிய விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.** $5 x 1 = 5$

1. நாம் பேசும் மொழியையும் எழுதும் மொழியையும் முறையாகப் புரிந்து கொள்வதற்கு _________ தேவைப்படுகிறது.
   (அ) இலக்கணம் (ஆ) இலக்கியம் (இ) பாட்டு
2. ‘ங்’ என்னும் எழுத்திற்கான நட்பு எழுத்து___________
   (அ) க (ஆ) த (இ) ப
3. ‘செ’ என்பது எவ்வகை எழுத்து _____________
   (அ) ஒற்றைக்கொம்பு (ஆ) இரட்டைக்கொம்பு (இ) துணையெழுத்து
4. ‘அண்ணா’ - இதில் ‘அ’ என்னும் எழுத்து எவ்வகை எழுத்தைச் சேர்ந்தது.
   (அ) உயிரெழுத்து (ஆ) மெய்யெழுத்து (இ) உயிர்மெய்எழுத்து
5. உயிரும் மெய்யும் சேர்ந்து________உயிர்மெய் எழுத்துகள் உருவாகின்றன.
   (அ) 116 (ஆ) 216 (இ) 316

***IV*. எவையேனும் ஒன்றிற்கு மட்டும் விடையளி:** (5)

1. ‘கடைசிவரை நம்பிக்கை’ என்னும் துணைப்பாடக் கதையை சுருக்கி கட்டுரை வடிவில் எழுதுக.
2. குறிஞ்சிப்பாட்டு நூலைப் பதிப்பிக்க உ.வே.சா. மேற்கொண்ட முயற்சி யாது?

www.kalvikkol.com

# மாதிரி வினாத்தாள்-5
# வளரறித்தேர்வு

வகுப்பு : ஆறாம் வகுப்பு　　　　　　　　　　　　　　　　　　　　　　மதிப்பெண் : 20
பாடம் ;தமிழ் (தாள்-1)　　　　　　　　　　　　　　　　　　　　　　நேரம் : 45 நிமிடம்

---

**பகுதி – அ ( படித்தல் திறன்)　　　　　　(5)**

***I.* கீழ்கண்ட பத்தியைப் படித்து வினாவிற்கு ஏற்ற விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.**

தேவாரம் என்னும் சொல்லைத் தே +வாரம் எனப் பிரித்துத் தெய்வத் தன்மையை உடைய இசைப்பாடல்கள் என்றும். தே + ஆரம் எனப் பிரித்துத் தெய்வத்திற்குச் சூட்டபெற்ற பாமாலை என்றும் கூறுவர். ஐசவத் திருமுறைகள் பன்னிரண்டனுள் முதல் ஏழும் மூளவர் தேவாரம். திருநாவுக்கரசர் பாடி அருளிய பாடல்கள் நான்கு, ஐந்து , ஆறாம் திருமுறைகள். நுமக்குப் பாடமாக அமைந்துள்ள பாடல் திருநாவுக்கரசர் அருளிய ஆறாந்திருமுளையில் உள்ளது.

**வினாக்கள்** :

1. தெய்வத்திற்குச் சூட்டப்படும் பாமாலை என்பது.
2. 

   (அ) தே + ஆரம்　(ஆ) தே + வாரம் (இ) தமிழ்ளவிடுதூது

2. சைவத் திருமுறைகள் மொத்தம் எத்தனை.

   (அ) பதின்மூன்று (ஆ) பத்து　(இ) பன்னிரண்டு

3. திருநாவுக்கரசர் பாடிய திருமுறை

   (அ) 4 , 5 , 6　　(ஆ) 6 , 2 , 3　　(இ) 3 , 4 , 5

4. தெய்வத் தன்மையுடைய இசைப்பாடல் என்பது

   (அ) தேவாரம்　(ஆ) நாலடியார்　(இ) திருக்குறள

.

5. மூவர் தேவாரம் என்று அழைக்கப்படுவது

   (அ) முதல்ஏழு　(ஆ) இரண்டாம் ஏழு　(இ) முதல் மூன்று

**பகுதி (ஆ) – எழுதுதல்　　　　　　(5)**

***II.* கட்டுரை அல்லது கடிதம் ( எவையேனும் ஒன்றுக்கு மட்டும் விடையளி)**

1. தேர்வில் முதன்மை பெற்ற நண்பனைக் பாராட்டிக் கடிதம் எழுதுக.
2. அறிவு வளர்ச்சியில தொலைக்காட்சியின் பங்கு குறித்து கட்டுரை எழுதுக.

www.kattrukkol.com

பகுதி –(இ) - இலக்கணம் (5)

***III***. **உரிய விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.**

1. 'உம்பர்' என்பதன் பொருள்
(அ) மேலே (ஆ) கீழே (இ) உள்ளே

2. தனியே நின்று சுட்டும்போது ஆண் பெண் அனைவரையும் பொதுவாகச் சுட்டும் சுட்டெழுத்துகள்
(அ) ஆ , ஈ (ஆ) அ , இ (இ) இ , உ

3. பழங்கால சுட்டெழுகத்து ______________
(அ) அ (ஆ) இ (இ) உ

4. 'ஏ' என்னும் எழுத்துக்கு உரிய பணி
(அ) இரண்டு (ஆ) நான்கு (இ) ஒன்று

5. வினா எழுப்புவதற்கு உரிய எழுத்துகள்
(அ) அ , ஓ , இ (ஆ) எ , ஏ , யா , ஓ (இ) ஆ , எ , இ , ஓ

***IV***. **எவையேனும் ஒன்றுக்கு மட்டும் விடையளி:** (5)

1. முத்துராமலிங்கரின் பள்ளிக்கல்வி குறித்து எழுதுக.

**(அல்லது)**

'எது பெரிய உண்மை' – என்னும் துணைப்பாடத்தைச் சுருக்கிக் கட்டுரை எழுதுக.

www.Kattrukkol.com

# மாதிரி வினாத்தாள்-6
# வளரறித்தேர்வு

**வகுப்பு : ஆறாம் வகுப்பு** **மதிப்பெண் : 20**
**பாடம் ; தமிழ் (தாள்-1)** **நேரம் : 45 நிமிடம்**

---

**பகுதி – அ ( படித்தல் திறன்)** **(5)**

***I***. **கீழ்கண்ட பத்தியைப் படித்து வினாவிற்கு ஏற்ற விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக**
.

திருவாரூர் + நான்கு + மணிமாலை = திருவாரூர் நான்மணிமாலை , திருவாரூரில் எழுந்தருளியுள்ள தியாகராசர் மீது பாடப்பெற்ற நான்மணிமாலை எனப் பொருள்படும். நான்மணிமாலை என்பது தமிழில் வழங்கும் தொண்ணூற்றாறு வகை சிற்றிலக்கியங்களுள் ஒன்று, முத்து , பவளம் , மரகதம் , மாணிக்கம் என்னும் நால்வகையான மணிகளால் ஆன மாலையைப் போன்று நால்வகையான பாடல்களால் (வெண்பா , கட்டளைக் கலித்துறை , ஆசிரிய விருத்தம் , ஆசிரியப்பா) ஆன நாற்பது செய்யுள்களைக் கொண்டது.

**வினாக்கள்:**

1. திருவாரூரில் எழுந்தருளியுள்ள தியாகராசர் மீது பாடப்பட்ட நூல்
   (அ) நான்மணிக்கடிகை (ஆ) நான்மணிமாலை (இ) திருவள்ளுவமாலை

2. தொண்ணூற்றாறு வகை சிற்றிலக்கியங்களுள் ஒன்று
   (அ) நான்மணிமாலை (ஆ) சிலப்பதிகாரம் (இ) புறநானூறு

3. நால்வகை மணிகளால் ஆன நூல்
   (அ) நாலடியார் (ஆ) நான்மணிமாலை (இ) அகநானூறு

4. திருவாரூர் நான்மணிமாலை _____ செய்யுள்களைக் கொண்டது.
   (அ) நாற்பது (ஆ) ஐம்பது (இ) இருபது

5. திருவாரூர் நான்மணிமாலை எவ்வகை நூல்களுள் ஒன்று
   (அ) சிற்றிலக்கியங்களுள் ஒன்று (ஆ) இலக்கண நூல்களுள் ஒன்று
   (இ) பதினென்கீழ்க்கணக்கு நூல்களுள் ஒன்று

**பகுதி (ஆ) – எழுதுதல்** **(5)**

***II***. **கட்டுரை அல்லது கடிதம் ( எவையேனும் ஒன்றுக்கு மட்டும் விடையளி)**

உனது வீட்டின் அருகே நடந்த சுதந்திர தின விழா குறித்து உன் தோழிக்கு ஒரு கடிதம் வரைக.

**(அல்லது** )

'பொங்கல் விழா' என்னும் தலைப்பில் ஓர் கட்டுரை வரைக.

**பகுதி –(இ) - இலக்கணம்**

**(5)**

***III***. **உரிய விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.**

1. 'மரம் ஆடியது' - இத்தொடரில் 'மரம்' என்பது எவ்வகை சொல்
   (அ) பெயர்ச்சொல் (ஆ) இடைச்சொல் (இ) உரிச்சொல்

2. தமிழ்ச்சொற்களுள் முதன்மையானவை _______
   (அ) பெயர்ச்சொல்லும் , வினைச்சொல்லும் (ஆ) வினைச்சொல் , இடைச்சொல்
   (இ) இடைச்சொல்லும் , உரிச்சொல்லும்

3. சொற்கள் ______ வகைப்படும்.
   (அ) நான்கு (ஆ) ஐந்து (இ) மூன்று

www.Kalvikkural.com

4. ‘கற்றான்’ - இவை எவ்வகை சொல்
(அ) பெயர்ச்சொல் (ஆ) வினைச்சொல் (இ) இடைச்சொல்

5. ‘பாடலை + சொன்னேன்’ - இச்சொல்லை ஒற்றெழுத்து சேர்த்து சரியான முறையில் எழுதவும்.
(அ) ஐ (ஆ) ச் (இ) க்

**IV. எவையேனும் ஒன்றுக்கு மட்டும் விடையளி: (5)**

1. நாட்டுப்புறப் பாடல்களின் வகைகளை எழுதுக?

2. ‘வீரச்சிறுவன்’ என்னும் துணைப்பாடக் கதையை சுருக்கி ஒரு பக்கத்திற்கு மிகாமல் கட்டுரை வடிவ வினா எழுதுக.

www.Kattrukkol.com

# மாதிரி வினாத்தாள்-7
# வளரறித்தேர்வு

**வகுப்பு : ஆறாம் வகுப்பு** **மதிப்பெண் : 20**
**பாடம் ; தமிழ் (தாள்-2)** **நேரம் : 45 நிமிடம்**

---

**பகுதி (அ) – படித்தல் திறன்**

***I***. **கீழ்கண்ட பத்தியைப் படித்து வினாவிற்கு ஏற்ற விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.**

"மக்கள் கவிஞர்" என அழைக்கப்படும் பட்டுக்கோட்டைக் கல்யாணசுந்தரம், எளிய தமிழில் அனைவருக்கும் புரியும்படி கவிதைகளை இயற்றியவர்ளூ திரையிசைப் பாடல்களையும் இயற்றியுள்ளார். உழைக்கும் மக்களின் துயரங்களையும் பொதுவுடைமைச் சிந்தனைகளையும் தம்முடைய பாடல்கள்வழிப் பரவலாக்கினார். பட்டுக்கோட்டை அருகே உள்ள செங்கப்படுத்தான்காடு என்னும் ஊரில் பிறந்தார். இவர் வாழ்ந்த காலம் 13.04.1930 முதல் 08.10.1959 வரை.

(5)

**வினாக்கள்:**

1.'மக்கள் கவிஞர்' என்று அழைக்கப்படுபவர்.
(அ) பட்டுக்கோட்டைக் கல்யாணசுந்தரம் (ஆ) சுந்தரம் (இ) வாலி

2. கல்யாணசுந்தரனார் பிறந்த ஊர் ________
(அ) பட்டுக்கோட்டை (ஆ) செங்கப்படுத்தான் காடு (இ) செங்கம்

3. பட்டுக்கோட்டைக் கல்யாணசுந்தரனார் பிறந்த ஆண்டு.
(அ) 1930 (ஆ) 1803 (இ) 1931

4. எளிய தமிழில் கவிதைகளை இயற்றியவர்
(அ) கல்யாணசுந்தரம் (ஆ) கவியரசு (இ) இராமசுந்தரம்

5. பட்டுக்கோட்டைக் கல்யாணசுந்தரனார் மறைந்த ஆண்டு.
(அ) 1959 (ஆ) 1949 (இ) 1859

**பகுதி –ஆ ( எழுதுதல்)**

(5)

***II***. **கட்டுரை அல்லது கடிதம் ( எவையேனும் ஒன்றுக்கு மட்டும் விடையளி)**

1. குடிநீர் வசதி வேண்டி நகராட்சி ஆணையருக்கு விண்ணப்பம் எழுதுக.

**(அல்லது)**

பெற்றோரின் பிறந்தநாளுக்கு வாழ்த்து கூறி கடிதம் எழுதுக.

**பகுதி - இ ( இலக்கணம்)**

***III***. **உரிய விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.** (5)

1. உயிரெழுத்துகளுள் நெடிலெழுத்துகளின் எண்ணிக்கை
(அ) 10 (ஆ) 16 (இ) 7
2. 'ண' என்னும் எழுத்துக்கு நட்பு எழுத்து
(அ) ட் (ஆ) ப் (இ) ந்
3. உயிரெழுத்துக்கள் _______ வகைப்படும்.
(அ) 5 (ஆ) 2 (இ) 3
4. உயிர்மெய்ககுறில் எழுத்துகள் ________.
(அ) ச் + இ = சி (ஆ) க் + ஆ = கா (இ) ம் + ஓ = மோ
5. நீண்ட ஓசை உடைய எழுத்துக்கள்
(அ) குறில் (ஆ) நெடில் (இ) மெய்யெழுத்து

***IV***. **எவையேனும் ஒன்றுக்கு மட்டும் விடையளி:** (5)

1. மனிதர்களின் நல்ல நண்பன் எது? ஏன்?

2.'பாம்புகள்' என்னும் துணைப்பாடக் கதையை சுருக்கி கட்டுரை எழுதுக.

www.kattrukkol.com

# மாதிரி வினாத்தாள்-8
# வளரறித்தேர்வு

வகுப்பு : ஆறாம் வகுப்பு | மதிப்பெண் : 20
பாடம் ;தமிழ் (தாள்-2) | நேரம் : 45 நிமிடம்

---

**பகுதி (அ) – படித்தல் திறன்**

***I.*** **கீழ்கண்ட பத்தியைப் படித்து வினாவிற்கு ஏற்ற விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக. (5)**

துமிழகத்தின் பழம்பெரும் சமயங்களுள் ஒன்று வைணவம். ஐவணவம் திருமாலை முழுமுதந் கடவுளாய்க் கொண்டு போற்றும். பன்னிரு ஆழ்வார்கள் பாடியருளிய தேனினும் இனிய தீந்தமிழ்ப் பனுவல் நாலாயிரத திவ்வியப் பிரபந்தம் நம்பாடப் பகுதி குலசேகர ஆழ்வார் பாடிய திருவாய் மொழியன கண் அமைந்துள்ளது.

வினாக்கள் :

1. தமிழகத்தின் மிகப் பழமையான சமயம்
   (அ) வைணவம் (ஆ) சைவம் (இ) பௌத்தம்

2. ஆழ்வார்கள் மொத்தம் ________
   (அ) பதின்மூன்று (ஆ) பன்னிரண்டு (இ) பதினாறு

3. ஆழ்வார்கள் பாடிய பாடல் எவ்வாறு அழைக்கப்படுகிறது.
   (அ) திருக்குறள் (ஆ) தேவாரம் (இ) பிரபந்தம்

4. நம் பாடப் பகுதியின் ஆசிரியர்
   (அ) குலசேகர ஆழ்வார் (ஆ) திருமங்கை ஆழ்வார் (இ) ஆழ்வார்

5. 'திருமால்' எச்சமயத்தை சார்ந்த தெய்வம்
   (அ) சைலம் (ஆ) வைணவம் (ஈ) பௌத்தம்

பகுதி - ஆ (எழுதுதல்)

*II.* கடிதம் அல்லது கட்டுரை எழுதுக. (5)

1.வாழ்க்கைக்குத் தேவைப்படும் ஏதேனும் ஓர் வசதி வேண்டி ஊராட்சி ஒன்றியத் தலைவருக்கு விண்ணப்பம் எழுதுக.

( அல்லது)

2. 'விலை வாசி ஏற்றம்' – என்னும் தலைப்பில் ஒரு கட்டுரை எழுதுக.

பகுதி - இ - இலக்கணம்

*III.* உரிய விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக. $5 x 1 = 5$

1. செய்யுளில் ஓசைக்காகவும் அழுத்தம் தருவதற்காகவும் பயன்படும் சொல்.
   (அ) கொல் (ஆ) சொல் (இ) எங்கே

2. 'சிங்கம் வந்தான்' - இதன் சரியான வடிவம்
   (அ) சிங்கம் வந்தது (ஆ) சிங்கம் வந்தாள் (இ) சிங்கம் வருகிறார்.

3. அளபெடை ______ னவகைப்படும்
   (அ) மூன்று (ஆ) நான்கு (இ) இரண்டு

4. திணை ______ வகைப்படும்.
   (அ) இரண்டு (ஆ) நான்கு (இ) மூன்று

www.Kalvikkol.com

5. ‘அவர்கள்’ ________ பால்
   (அ) ஆண்பால்   (ஆ) பெண்பால்   (இ) பலர்பால்

**IV. எவையேனும் ஒன்றுக்கு மட்டும் விடையளி: (5)**

1. எவற்றை நம்பி உழவுத் தொழிலில் ஈ:டுவோம் என்கிறோம் பட்டுக்கோட்டையார்?

   (அல்லது)

   சாதனைப் பெண்மணி மேரிகியூரியின் அறிவியல் கண்டுபிடிப்புகளைக் கட்டுரையாக எழுதுக.

www.Kattrukkol.com

# மாதிரி வினாத்தாள்-9
# வளரறித்தேர்வு

**வகுப்பு : ஆறாம் வகுப்பு** **மதிப்பெண் : 20**
**பாடம் ; தமிழ் (தாள்-2)** **நேரம் : 45 நிமிடம்**

---

**பகுதி (அ) – படித்தல் திறன**

*I*. **கீழ்கண்ட பத்தியைப் படித்து வினாவிற்கு ஏற்ற விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக. (5)**

சிப்பியிலே நல்ல முத்து விளைந்திடுந்
செய்தி யறியாயோ? நன்னெஞ்சே!
குப்பையிலே மலர்கொஞ்சுங் குருக்கத்திக்
கொடி வளராதோ? நன்னெஞ்சே!
உள்ள நிறைவிலோர் கள்ளம் புகுந்திடில்
உள்ள நிறைவிலோர் கள்ளம் புகுந்திடில்
உள்ளம் நிறைவாமோ – நன்னெஞ்சே!

-பாரதியார்

**வினாக்கள் :**

1. முத்து விளையும் இடம் ___________
(அ) செடி (ஆ) மண் (இ) சிப்பி

2. இப்பாடலில் குறிப்பிடும் உள்ளம்
(அ) நல்ல உள்ளம் (ஆ) தீய உள்ளம் (இ) மனித உள்ளம்

3. குப்பையில் வளரும் கொடி ________
(அ) மாமரம் (ஆ) குருக்கத்தி (இ) தென்னைமரம்

4. உள்ளத்தில் எவை புகுந்திடில் தீமையாகும் _________
(அ) நல்லெண்ணம் (ஆ) அறிவு (இ) கள்ளம்

5. இப்பாடலின் ஆசிரியர் _______________
(அ) பாரதியார் (ஆ) பாரதிதாசன் (இ) வரதராசன்

**பகுதி – ஆ (எழுதுதல் திறன்) (5)**

*II*. **எவையேனும் ஒன்றுக்கு மட்டும் விடையளி:**

1. உனது பகுதியில் மருத்துவமனை வேண்டி மாவட்ட ஆட்சியருக்கு விண்ணப்பக் கடிதம் எழுதுக.

2.'புகை வண்டியும் மக்களின் கட்டாயமும்' என்னும் தலைப்பில் ஓர் கட்டுரை வரைக.

**பகுதி - இ ( இலக்கணம்) (5)**

*III*. **உரிய விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.**

*1.* 'மடமட' – எவ்வகை சொல்
(அ) தொடர் (ஆ) அடுக்குத்தொடர் (இ) இரட்டைக்கிளவி

2. வ் + ஏ = _______ சேர்ந்தால் எவ்உயிர்மெய்யெழுத்து தோன்றும்.
(அ) செ (ஆ) வே (இ) தோ

3. சுருக்கமாய்ப் பேசு ளு _________ பேசாதே, என்பதற்கான இரட்டைக் கிளவி சொல்
(அ) வளவள (ஆ) பாம்பு பாம்பு (இ) மடமட

4. 'ஆறு' என்னும் சொல்லிற்கு ______ பொருள்கள் உள்ளன.
(அ) 6 (ஆ) 4 (இ) 8

5. சொற்களை பிரித்தால் பொருள் தராதது __________
(அ) இரட்டைக்கிளவி (ஆ) பெயர்ச்சொல் (இ) அடுக்குத்தொடர்

www.kalvikkol.com

***IV*. எவையேனும் ஒன்றுக்கு மட்டும் விடையளி :** **(5)**

1. கற்றவர்க்குக் கட்டுச்சோறு தேவைப்படாது ஏன்?

**(அல்லது)**

'ஊர்த்திருவிழா – ஒரு கலைவிழா' என்னும் துணைப்பாடக் கதையை சுருக்கி ஒரு பக்கத்திற்கு மிகாமல் கட்டுரை வரைக.

www.Kattrukkol.com